நான்கு அமைச்சர்களைக் கூட்டிச் சென்று அந்தப் பள்ளியிலே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அன்றையதினமே அந்தப் பள்ளிக்கு மேட்டூர் தண்ணீருக்கான ஒரு குழாய் இணைப்பு வேண்டுமென்று காலையிலே கேட்டவுடன், மாலையிலேயே அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. அன்றையதினமே கனக்ஷென் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அந்தப் பள்ளியிலே இன்றையதினம் கோவை மாவட்டம், நீலகிரி மாவட்டம், பெரியார் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கிறார்கள். ஆகவே, அங்கே 8–வதிலிருந்து 10-வது வரை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அங்கேயிருந்து திருச்சிக்கும், சென்னைக்கும் வரவேண்டிய காரணத்தினால் அந்தக் கோரிக்கையை மட்டும் நிறைவேற்றித் தருவார்களா என்று இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் விழியிழந்தோர் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் முதற்கொண்டு பள்ளிக்கூடங்களில் அதிகப்படியான வகுப்பறைகள் தொடங்குவதற்கும், அங்கே அதிகமான வகுப்புகளின் மூலமாக அந்தப் பிள்ளைகள் படிப்பதற்கும் அனைத்து வசதிகளையும் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஒரு பள்ளி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே இந்தப் பள்ளியும் சில ஆண்டுகளுக்குள்ளே எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 53, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

53—

பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்தல்

*36186—திரு. வெ. பழனிசாமி:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 17]

பஞ்சு ஏற்றுமதியால் பஞ்சாலை பனியன் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதால், பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மத்திய அமைச்சரை நேரிடையாகச் சந்தித்து இதற்கு வற்புறுத்தி இருக்கிறார்கள்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கடுமையான நூல் விலை ஏற்றத்தால் பனியன் பஞ்சாலை, பவர் லூம், அதேபோல் கைத்தறி ஆகிய தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம் பஞ்சினுடைய விலையேற்றம். பருத்தியினுடைய விலையேற்றத்திற்கு அடிப்படை ஏற்றுமதி செய்வதும், அதேபோல் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களிலுள்ள பருத்தி வியாபாரிகளுடைய வர்த்தக சூதாட்டத்தினுடைய காரணமாக, பதுக்கி வைக்கின்ற தன்மையின் காரணமாக, கடுமையான விலையேற்றத்தால் இந்தத் தொழில்கள் பாதிக்கப்பட்டு, இந்திய நாடு முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து, மத்திய இணை அமைச்சர் திரு. வெங்கடசாமி நாயுடுவையும் கூப்பிட்டு, அழைத்து பேசி நூல் விலை, பருத்தி ஏற்றுமதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாட்டிலேயே ஒரு மாநில- முதலமைச்சர் நேரிடையாக இந்தத் தொழில் குறித்துப் பேசியதே இதயதெய்வம் புரட்சித் தலைவி என்பதை நாடு நன்று அறியும். அவர்களுக்கு திருப்பூர் தொகுதியினுடைய மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, உலகத்திலேயே மிகப் பெரிய ஜனத்தொகை கொண்ட இந்திய நாட்டில் அதிகமான வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற மூலப் பொருளான பஞ்சை ஏற்றுமதி செய்வதற்கு நிரந்தரமான தடை விதிக்க மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[*1995 மார்ச் 17*

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் 93-ல் மத்திய அரசு பஞ்சு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கி பஞ்சு ஏற்றுமதியை எளிதாக்கியது. இதன் காரணமாகவும் 1993-94ஆம் பருத்தி வருடத்தில் பருத்தி, விளைச்சலில் எதிர்பார்த்த மகசூல் காணாததாலும் 1993-ஆம் ஆண்டு இறுதி மற்றும் 1994-ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்கள் ஆகியவற்றில் வரலாறு காணாத அளவுக்கு பஞ்சு விலை உயர்ந்தது; நூலின் விலையும் உயர்ந்தது; நெசவாளர்களும் பெருத்த அவதிக்கு உள்ளானார்கள். இதனால் மாண்புமிகு முதல்வர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டெல்லியிலே பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதற்குப் பின்னால் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்வதோடு பதுக்கலையும் கண்டுபிடித்தாகவேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அந்த வேண்டுகோளை மத்திய அமைச்சர் ஏற்றுக் கொண்டு பஞ்சு ஏற்றுமதிக்குத் தடை உத்தரவைத் தற்போது பிறப்பித்துள்ளார்கள். தற்போது மாநிலத்தில் பஞ்சு விலை படிப்படியாகக் குறைந்து நெசவாளர்கள், பஞ்சாலைகள், பனியன் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவது இப்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையினால் குறைந்திருக்கிறது. இதனால் தமிழகத்தில் இருக்கிற நெசவாளர்கள் மட்டுமல்ல; இந்தியா முழுவதும் இருக்கின்ற நெசவாளர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் பாதுகாக்கப்பட்டுள்ளனர். அதாவது பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்த நெசவாளர்கள் இன்றைக்கு பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழகத்திலே இருக்கிற நெசவாளர்கள் மட்டும் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி செலுத்தவில்லை; இந்தியா முழுக்க இருக்கின்ற நெசவாளர்கள் இன்றைக்கு ஒரு முதலமைச்சருக்கு நன்றி செலுத்துகிறார்கள் என்றாலே அது நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இதில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நெசவாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகாதவாறு தொடர்ந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 மார்ச் 17]

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சினால் உருவாகிற பனியன் மற்றும் பவர்லூம் காடா துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதால் அவற்றை ஏற்றுமதி செய்கிற வாய்ப்பு இருந்தும், இங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, அவற்றை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை அதிகம் பெறுகிற வாய்ப்பு இருந்தும் கூட தொடர்ந்து மத்திய அரசு மூலப் பொருளான பஞ்சினை ஏற்றுமதி செய்கிறது. அவ்வப்போது குரல் கொடுக்கிற நேரத்தில் மட்டும் தற்போது இல்லை என்று அவர்கள் சொன்னாலும், நிரந்தமாக பருத்தி ஏற்றுமதியைத் தடை செய்யவும், மத்திய அதிகாரக் குவிப்பினுடைய ஆதரவோடு பஞ்சைப் பதுக்கி வைக்கிற வர்த்தக சூதாடிகளிடமிருந்து பதுக்கலை வெளியே கொண்டு வரவும், நிரந்தமாக இந்தத் தொழிலுக்கு ஒரு பாதுகாப்பை உருவாக்குகிற வகையிலும் ஆவன செய்யப்படுமா? நிரந்தரமாக, ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கக்கூடிய அளவுக்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதைக் கடுமையாக வற்புறுத்தி தொடர்ந்து போராடி, அவர்களுக்கு இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதோடு பதுக்கலையும், கடத்தலையும் தடுக்கவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் வற்புறுத்தி இருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இப்படி நடைபெறாவண்ணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசைக் கண்டிப்பாக வற்புறுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

54—

பட்டுக்கோட்டை அமரர் திரு. கல்யாணசுந்தரத்துக்கு சிலை அமைத்தல்

39270*—திரு. கி. பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—